

# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.

யோவான் -14:14

செய்தி மலர்
2016
ஜனவரி

இதழ் : 8
மலர் : 16



# தலைவர் உரை



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே ! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தேவனுடைய பெரிதான கிருபையால் 2016ஆம் வருடத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்திருக்கிறார் .

கடந்த வருடம் முழுவதும் நம்மை அதிசமாய் நடத்தி வந்த தேவனுக்கு நன்றி செலுத்துவோம். நம் சபையின் ஆராதனைகள், ஊழியங்கள், எல்லாவற்றிலும் தேவன் கூட இருந்து மகிமைபட்டதற்காய் அவருக்கு ஸ்தோத்திரங்களை செலுத்துவோம்.

கடந்த வருடத்தில் பல அழிவுகள் வந்தது,(விஷேசமாக தமிழ் நாட்டில்)அதிலிருந்து நம்மையும் நம் குடும்பத்தையும் தேவன் காத்துக் கொண்ட படியால் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். நம்முடைய வியாதி நோய்களில் இருந்து விடுதலை தந்ததற்காய் ஸ்தோத்திரம் செலுத்துவோம். நம்முடைய தேவைகளை ஏற்ற நேரத்தில் சந்தித்ததற்காய் நம் தேவனை ஸ்தோத்திரிப்போம்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!. வாக்குதத்தங்களை தேவன் கொடுக்கும் போது, அதை அப்படியே விசுவாசித்தால், அந்த வாக்குத்தத்தங்கள் நமக்கு உரியதாக மாற்றிவிடும். ஆபிரகாமோடு தேவன் பேசும்போது "உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களை போல பெருக பண்ணுவேன் என்றார். அவன் அப்படியே விசுவாசித்தான், அதுவே அவனுக்கு நீதி எனப்பட்டது. அந்த விசுவாசம் அவனை நீதிமானாக்கி, வாக்குத்தத்தத்திற்கு உரியவனாக அவனை மாற்றி விட்டது. இந்த புதிய வருஷத்திலும் தேவன் கொடுக்கும் வாக்குத்தத்தத்தை விசுவாசியுங்கள். அந்த வாக்குத்தத்தத்தின்படியே உங்களை ஆசீர்வதித்து நடத்தி செல்லுவார்.

2016 –ஆம் வருட வாக்குத்தத்தமானது "என் நாமத்தினாலே எதை கேட்டாலும் அதை நான் சொல்லுவேன்" (யோவான் 14:14)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! எல்லாவற்றையும் உடைய தேவாதி தேவன் நாம் எப்படி கேட்டால் கிடைக்கும் என்று சொல்லி கொடுக்கும் போது அதை அப்படியே செய்து ஆசீர்வாதங்களை அனுபவிப்போம்.

சபையில் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்களை செயற்குழு மற்றும் ஊழிய பொருப்பாளர்களின் மற்றும் எங்கள் குடும்பத்தின் சார்பிலும் கூறிக்கொள்கிறேன். வரும் மாதத்தின் ஆராதனை மற்றும் ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளவும் .

கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக,

# இவைகளில் தேவன் பிரியப்படுகிறாரோ?

ஒரு சகோதரி தன் கணவனை பார்த்து ஒரு விருந்தாளி நம் வீட்டிற்கு வந்தால் அன்பொழுக பேசுகிறீர்களே? அப்படி என்னுடன் பேசக்கூடாதா? கரடு முரடாக பேசி என் மனதை காயப்படுத்துகிறீர்களே என்று கூறினார்கள். ஆம் சகோதரர்களே வீட்டில் மனைவியை காயப்படுத்தி விட்டு சபையில் மேடையில் நின்று, கர்த்தர் நம் காயங்களை கட்டுகிறார் ஆற்றுகிறார் தேற்றுகிறார் என்று நீங்கள் மேடையில் பிரசங்கம் பண்ணுவதில் தேவன் பிரியபடுகிறாரோ? சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் மேல் தேவன் பிரியமாய் இருக்கிறாரோ?

நீங்கள் ஜெபம் பண்ணும் போது பல சமயங்களில் இயேசு உம்மில் அன்பு கூறுகிறேன் ஆண்டவரே உம்மை நான் நேசிக்கிறேன் என்று கூறி ஜெபிக்கிறீர்கள்.ஆனால் நீங்கள் காண்கின்ற சகோதரி யார்? உங்கள் மனைவி சகோதரிகளே நீங்கள் காண்கின்ற சகோதரர் யார்? உங்கள் கணவர். காண்கின்ற உங்கள் சகோதரன் மீது நீங்கள் அன்பு கூறுகிறேன் என்று சொல்லி பகைத்தால் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவீர்கள்? அப்படியானால் நீங்கள் ஜெபம் பண்ணியும் பொய்யர் ஆகிறீர்கள் அப்படியானால் நீங்கள் செய்யும் ஜெபம் வானத்திற்கு எட்டுமோ? உங்கள் ஜெபத்தில் தேவன் பிரியமானவராய் இருப்பாரோ? Intelligent recognition. புரிந்து கொள்ளுங்கள் அங்கீகாரம் பண்ணுங்கள் I பேதுரு 3:7 ....புருஷர்களே ..ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச்சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள். இங்கு விவேகம் என்ற வார்த்தைக்கு புரிந்து கொள்ளுதல் (Full under standing) அங்கீகாரம் பண்ணுதல் (Intelligent recognition)என்ற அர்த்தம் உள்ளது, அதாவது உங்கள் மனைவியை பரிபூரணமாக புரிந்து கொண்டு மனைவி என்ற மேன்மையான அந்தஸ்துடன் அங்கீகரித்து அவர்களுக்கு உரிய கனத்தை செலுத்துங்கள்.

கர்த்தர் உங்களோடு இணைந்திருக்கிறார் என்றும் உங்களுடைய வாழ்வின் உடன் பங்காளி என்று உங்களுடன் நித்திய ஜீவனை சுதந்தரிப்பவர்கள் என்று நினைத்து அவர்களை கனப்படுத்துங்கள், இப்படி நீங்கள் செய்யாவிடில், நீங்கள் வியர்க்க வியர்க்க ஜெபம் பண்ணினாலும் ஜெபத்தில் சாத்தானை ஓட ஓட விரட்டினாலும் நிச்சயம் உங்கள் ஜெபத்திற்கு தடை உண்டு. இயேசுவில் அன்பான தேவ ஊழியர்களே வேதம் நமக்கு என்ன சொல்லுகிறதோ அதை பின்பற்றுவோம்.

ஆமென்

தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக

## 2016 ஆம் ஆண்டு சபையின் வாக்குதத்தத்த தேவசெய்தி

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே !**
கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்கள்

இந்த வருடம் நம் சபைக்கு தேவன் கொடுத்த வாக்குதத்தம் !

**"என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் நான் செய்வேன்"** - யோவான் 14:14 .

வேதத்தில் அநேக வாக்குதத்தங்கள் தேவன் தந்திருக்கிறார். ஒவ்வொன்றும் நமக்கு ஆசீர்வாதங்கள் கொண்டு வருகிறது. ஆனால் தேவன் எந்த நேரத்தில் எதை தர வேண்டும் என்று ஏற்கனவே ஆயத்தம் பன்னியிருக்கிறார். இந்த வருடத்தில் இந்த வாக்குதத்தம் நமது சபைக்கு மகிமையான காரியங்கள் கொண்டு வரும். சபை என்பது நம் எல்லாரையும் கொண்டது. விசுவாசிக்கிறவர்களுக்கு அந்த வாக்குத்தத்தங்கள் உரியதாய்மாறிவிடுகிறது.

**என் நாமத்தினாலே** – இயேசு தம்முடைய சீஷர்களிடம் சொல்லும் போது "என் நாமத்தினாலே" நீங்கள் என்ன கேட்டாலும் நான் கொடுப்பேன் என்றார். "என் நாமத்தினாலே" என்று சொல்லுகிறார் எப்படிப்பட்டவர் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

1. **முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் (வெளி 2:8)** அவர் இருக்கிறவராகவே இருக்கிறார், அதுமாத்திரமல்ல எல்லா அதிகாரங்களும், துரைத்தனத்திற்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்திற்கும் இம்மையில் மர்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும். எல்லா நாமத்திற்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கதக்கதாய், அவரை உன்னதங்களில் நமது வலப்பக்கத்தில் உட்க்காரும் படி செய்து எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்கு கீழ்படுத்தி (எபே :1:20–22)

ஆண்டவர் இயேசுவின் நாமம் பூமியிலும் வானத்திலும், உள்ள எல்லா நாமத்திற்கும் மேலான நாமம், அதற்கு மேலான நாமம் ஒன்றுமில்லை

ஆனபடியால் இந்த வருடத்தில் இந்த இயேசுவின் நமத்தில் எதையும் கேட்க வேண்டும் என்று நமக்கு ஆலோசனை கொடுக்கபடுகிறது.

அநேக ஜெபங்களில் பல காரியங்களை சொல்லி ஜெபிக்கிறோம். ஆனால் இயேசு நாமத்தை சொல்லி அல்லது இயேசு நாமம் மூலம் கேட்க தவறி விடுகிறோம். யோவான் 16:24ல் *இதுவரைக்கும் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்.* என்று ஆண்டவர் இயேசு தம்முடை சீஷர்களிடத்தில் சொன்னார்.

நாம் கேட்பது பிதாவினிடத்தில் ஆனால் "இயேசுவின் நாமத்தினாலே" கேட்க வேண்டும்

**நீங்கள் எதை கேட்டாலும் :** உங்களையும் என்னையும் பார்த்து நேரடியாக சொல்லும் ஒரு வார்த்தை, எதை கேட்டாலும் என்று சொல்லுகிறார். பிரியமானவர்களே நம்முடைய ஆண்டவர் சகல அதிகாரத்தையும் உடையவர். அவரால் செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றும் இல்லை. இந்த புதிய வருடத்தில் கண்டிப்பாக எதையோ ஒன்றை உங்களுக்கு தேவையாயிருக்கிறது என்பதை தேவன் அறிவார், ஆனால் அவர் எதிர்பார்ப்பது, நீங்கள் கேட்க வேண்டும். அதுதான் ஜெபம், இதுவரையும் ஜெபித்தே பழக்கமில்லை என்று நினைக்க வேண்டாம். ஜெபிப்பவர்களாய் இருந்தால், *நீங்கள் வேண்டிக்கொள்ளும் முன்னே உங்களுக்கு இன்னது தேவை என்று பரமபிதா அறிந்திருக்கிறார்* (மத் 6:32) ஆனால் இயேசுவின் நாமத்தினாலே, நீங்கள் கேட்க வேண்டும், மற்றவர்களிடம் சொல்லி கேட்க (ஜெபிக்க) சொல்வது அல்ல. நாமாகவே கேட்க வேண்டும், அவர் எல்லாருக்கும் பிதாவும் தேவனுமாயிருக்கிறார்.

நம்முடைய தேவை நமக்கும் தேவனுக்கும்தான் தெரியும். நம்முடைய வேதனையும் துக்கமும் அப்படித்தான், ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்து, பாவம் மன்னிக்கப்பட்டு அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்ட ஒவ்வொருவரும் அவருடைய கிருபாசனத்தன்டை தைரியமாய் கிட்டி சேர முடியும், வேறு யாரும் நமக்கு மத்தியஸ்தர் வேண்டாம். அது போல நம் மனைவி ஜெபிப்பார்கள், என் கணவர் ஜெபிப்பார்கள், என் பெற்றோர் அல்லது என் பிள்ளைகள் ஜெபிப்பார்கள், என்று நினைக்கவேண்டாம். ஆண்டவர் தெளிவாக சொல்லுகிறார் நீ என்ன நீ என்னிடத்தில் கேள் என்று

**நான் செய்வேன் :** தேவனிடம் கேட்கும் போது இது என்னால் முடியாது என்று சொல்ல முடியாது. ஒரு முறை குருடன் ஒருவன் இயேசுவே தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று சொல்லி கூப்பிட்டான். இயேசு நின்று அவனை நம்மிடத்தில் அழைத்து அவன் கேட்டபடி அவனுக்கு பார்வை கொடுத்ததாக (லூக் 18:35 –43) எழுதப்பட்டிருக்கிறது.

வேறு யாருக்கோ வைத்திருந்ததை எடுத்து உங்களுக்கு தரப் போவதில்லை. உங்களுக்காய் விஷேசமாய் அதை செய்கிறார். நீ கேட்பதற்காய் இதை வைத்துக்கொள் என்று எதையோ உங்களுக்கு அவர் தருவதில்லை உங்களுக்கென்று சரியான துணையை, வேலையை, குழந்தையை, தேவைகளை, சுகத்தை இப்படி நமக்கு ஏற்றாற் போல உடனடியாக அவர் செய்கிறார். ஆனபடியால்தான் அவர் சொல்லுகிறார் அதை நான் செய்வேன் என்று சொல்லுகிறார். எப்பேர்ப்பட்ட காரியமாக இருந்தாலும் அவரால் செய்ய முடியும், அவரால் செய்ய முடியாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை

பிரியமானவர்களே! தேவனுக்கு சிறிய பிரச்சனையும் ஒன்றுதான், பெரிய பிரச்சனை அல்லது வியாதியும் ஒன்றுதான் எத்தனையோ பரிசுத்தவான்கள் இயேசுவின் நாமத்தினாலே அவர்களின் தேவைகளை கேட்டு அவரால் பெற்று கொண்டது போல , நாமும் இயேசுவின் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்போம் . எதை கேட்டாலும் குமாரனில் பிதா மகிமைபடும்படி அதை செய்வேன் என்றும் சொல்லும் தேவனிடத்தில், குமாரன் மகிமைபடும்படியான காரியத்தை கேட்ப்போம் அது மாத்திரமல்ல இத்தனை வருடங்களும் தடையாக இருக்கும் காரியத்தில் தடை மாறி ஜெயம் கிடைக்க கேட்போம். சகல அதிகாரமும் வல்லமையும் உள்ளவர் நம்முடைய தேவைகளை சம்பூரணமாய் நிறைவேற்ற சந்திக்க உண்மையுள்ளவர் நம்முடைய தேவன்.

அவருக்கே மகிமை உண்டாவதாக !

கிறிஸ்துவுக்குள்

அன்பு சகோதரன்

R. ரவிச்சந்திரன்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் நேர்ந்து கொண்ட காணிக்கைகளை, திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று சகோதரர் எபிநேசர் அவர்களிடத்திலும், இந்திய தேச ஊழியர்களை தாங்கும் ஊழியத்திற்கென்று சகோ. ஆரோக்கியராஜ் அவர்களிடத்திலும், போக்குவரத்து(Transport) ஊழியத்திற்கென்று சகோ. வில்ஸன் அவர்களிடத்திலும், தங்களது காணிக்கைகளை கொடுத்து ஊழியத்தை தாங்கும்படி பணிவண்புடன் கேட்டு கொள்கிறோம் (மறவாமல் ரசீது பெற்று கொள்ளவும்) கொள்ளளவும்

# நம் சிந்தனைக்கு

## Jesus is the Great

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம் ' நாம் கண்ட வாக்குதத்த வசனம் நம்மை இப்படியாக சுதந்தரிக்க சொல்லிகட்டளை செய்கிறது. வாசிக்கலாம் (எபிரேயர் 13ஆவதுஅதிகாரம் 5ஆம் வசனம்.' நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கிறவைகளே போதுமென்று எண்ணுங்கள். அப்போது நான் உன்னை விட்டு விலகுவதில்லை உள்ளை கை விடுவதுமில்லை,என்று வேத வசனம் இவ்வாறாக கட்டளை செய்ய, நாமோ வசனத்தில் கண்டிப்பானவைகளை எடுத்து தூர வைத்துவிட்டு நலமானதை அல்லது சாதகமானவைகளை மட்டும் எடுத்து அதையே உரித்தாக்கிக் கொண்டு வாழ்ந்து வருகிறோம்.

இந்த வசனத்தை தியானித்தோமானால் இன்றைய சில கிறிஸ்தவர்கள் எப்படியாவது ஐசுவரிவானாக பெரிய ஸ்தானத்தில் இருக்க வேண்டும் மனிதர்கள் மத்தியில் பெரியவனாக உயர்ந்தவனாக நாம் பேசப்பட வேண்டும், எல்லா இடங்களிலும் முதன்மையாக அமர வேண்டும், என்று அங்கலாய்கிறதை பார்க்கிறோம். இதற்கு மூலகாரணம் பண ஆசையே, இதனால் தேவ மகிமையை இழக்க நேரிடும் இதனால்தான் தேவ வார்த்தை முன்பாகவே நம்மை எச்சரித்து இந்த வசனத்தை உரித்தாக்க சொல்கிறது. மேலும் உலகப் பொருட்களை சிநேகித்து ஐசுவரியவான்களாக மாற விரும்பும் கிறிஸ்தவர்களை இன்னொரு வசனம் கடுமையாக எச்சரிக்கை செய்கிறது, நிங்கள் அநேகர் மெச்சிக் கொள்ளும் விசுவாசியாக இருக்கலாம்.ஆனால் உங்கள் இருதயத்தில் உங்கள் இருதயத்தின் ஆழத்தில் ஓர் பணக்காரனாக வேண்டும் என்று ஆசை இருக்கலாம், ஆனால் வேத வசனம் இப்படியாக எச்சரித்து சொல்கிறது. 'ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்.

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்." என வேத வசனம் (I தீமத்தேயு-6:9-10)வசனங்களில் மிக தெளிவாக எச்சரிக்கையின் செய்தியாக சொல்லப்பட்டிருக்கிறது.. ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் நீங்கள் மேலே சொல்லப்பட்ட கொடிய துன்பத்தை பார்த்தீர்களா? ஐசுவரியனான்களாக மாற விரும்புவோர்க்கு பிசாசு விரித்து வைத்திருக்கும் கண்ணிவலைதான் இது.

தேவன் நமக்கு ஐசுவரியத்தை கொஞ்சமாக கொடுத்து இருக்கலாம். அதில் சம்பூரண மகிழ்ச்சி கொண்டு வாழுங்கள். சில காலம் கழித்து ஏதாவது ஒரு வழிவாசலை திறந்து தேவன் அதிகம் தருவார். மாறாக நாம் ஒரு பெரிய பணக்காரனாக மாறவேண்டும் என்ற எண்ணத்தை உங்கள் இருதயத்தில் வளர விடாதீர்கள் (1 தீமத்தேயு 6:10 பண ஆசையே எல்லா தீமைக்கும் வேராய் இருக்கிறது என வேதம் நம்மை கருத்தாய் எச்சரிக்கை செய்கிறது. (1 தீமத்தேயு 6:11)ல் நீயோ தேவனுடைய மனுஷனே இவைகளை விட்டு ஓடு என சொல்லப்படுகிறது. இவ்வாறு வேத வசனம் தொடர்ந்து பண ஆசையை குறித்து நம்மை எச்சரித்துக் கொண்டிருக்கிறது. பணத்தை விரும்பி நேசித்துக் கொண்டு வெளியிலும் சரி, சபையிலும் சரி, எந்த ஊழியத்தை செய்தாலும் அது தேவனால் அங்கீகரிக்காமலே காணப்படும்.

இன்று நம் தேசத்தில் திரளான கிறிஸ்தவ ஊழியர்கள் பணத்தை நேசித்துக் கொண்டு அதற்காகவே ஊழியம் செய்கிறார்கள். ஆனால் இயேசு சொல்கிறார் (லூக்கா 16:13)ல் அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவற்றை எல்லாம் வெறுத்து விடாவிட்டால் அவன் எனக்கு சீஷனாக இருக்கமாட்டான், என ஆணித்தரமாக கூறுகிறார். சீஷத்துவத்தை மேற்கொள்ளும்படியாக நம்மை குறித்து எதிர்நோக்கி கொண்டிருக்கும் வேளையில், நாம் பண ஆசையிலும் உலக பொருட்களுக்கும் நம் இருதயத்தை செலுத்துவோமானால் நாம் சீஷர்களாக மாறுவது எட்டாக் கனியாகவே இருக்கும் தேவனுக்கும், பணத்திற்கும் ஊழியம் செய்ய ஒருக்காலும் முடியாது. இயேசுவுக்கு சீஷனாகவும் இருக்க வேண்டும் பணத்தையும் வாரி சேகரிக்க வேண்டும் என்று விரும்பினால் நாம் தேவனுக்கு பிரயோஜனமற்றவர்கள்.

இவ்வுலக வாழ்க்கையில் ஈர்க்கப்பட்டு பணத்திற்கு பின்பாக போக விரும்பினால் ஒரு வேளை சாதாரண பெயர் கிறிஸ்தவ விசுவாசியாய் இருக்கலாம். ஆனால் ஒரு போதும் இயேசுவின் சீஷர்களாக நாம் இருக்க முடியாது. சகோதரிகளே நீங்களும் இயேசுவின் சீஷர்களாக அல்லது சீஷியாக மாற வேண்டும் என்று இயேசு விரும்புகிறார். அப்படியானால் இயேசுவுக்குள் மறுபடியும் பிறந்து இருக்கிறோம் என்பதை மறந்து ஆடம்பரமான அணிகளன்களினாலும் ஆடை அலங்காரங்களினாலும் நம்மை உலகத்துக்கு முன்பாக எடுத்து காட்டி இயேசுவை தாழ்மை படுத்துகிறோம். இந்த உலகப்பிரகாரமான காரியங்களை விட்டு மீள்வது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல , ஆனாலும் இதுதான் உண்மை . மீண்டும் பிறந்த அனுபவம் நமக்குள் காணப்படும் பொழுது, நம்முடைய பழைய மனிதன் மனுஷி நம்மை விட்டு நீக்கப்பட்டுவிட்டாள், அதாவது அடக்கம் பண்ணப்பட்டாள் இதுதான் உண்மை

(தொடர்சி 13 ஆம் பக்கம் )

## 2015 – டிசம்பர் மாத விடைகள்

1. சிம்சோன் – நியா – 15:3–5
2. சிம்சோன் – நியா – 15: 15
3. சம்கர் – நியா – 3 :31
4. ஒத்னியேல் – நியா – 3 :8–11
5. யெப்தா – நியா – 11 : 32
6. அபிலமேக்கு – நியா – 9 : 52–54
7. இஸ்ரவேலர் – நியா – 5 : 8
8. சிசெரா – நியா – 4 : 2
9. செபுலோன், நப்தலி – நியா – 5 : 18
10. சிம்சோன் –நியா – 16 : 20
11. கர்த்தருடைய தூதரானவர். – நியா – 13 : 20
12. சிம்சோன் – நியா – 15 : 4
13. யாகேல் – நியா – 5 : 24
14. சிம்சோன் – நியா – 16் 11–12
15. தெபொராள் – நியா – 5: 7

## 2015 டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்புக்குமார்
Sis. செலின் டேவிட்
Sis. டெய்ஸி எபிநேசர்
Sis. சாந்தி
Sis. மெர்சிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. மரியா குளோரி தாஸ்
Sis. ஜோன் அசோக்குமார்

Bro. ஜாண்ஸன்
Bro. கிறிஸ்டோபர். M

## "...உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்.."
## (ஏசாயா– 62:3)

### இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஜெனட் ஆரோக்கியதாஸ்
செல்வி. சுனிதா சுந்தர்ராஜ்
செல்வி. சுஜானா லென்சிபாய்
செல்வி. ஜாய் சுஹிலின் ஜாய்சன்
செல்வி. ஏஞ்சலின் அஜிதா மனோகரன்
செல்வி. ஷெரின் பெனிற்றா ஸ்டாலின்
செல்வி. அக்சாள் நிசி எபிநேசர்
செல்வி. காருண்யா ரவிச்சந்திரன்
செல்வி. அன்ஷிகா ஸ்டீபன்

செல்வன். எட்வின் ராஜ்
செல்வன். கிப்டி ஆல்பர்ட்

சகோதரி. சுசீலா லாசர்
சகோதரி. சான்ட்ரா கோமஸ்
சகோதரி. லைலா ஆல்பர்ட்
சகோதரி. ஜோன் ஆப் ஆர்க் அசோக்குமார்
சகோதரி. சுமதி ஐசக் துரை

சகோதரி. ஹில்டா பால் பாண்டியராஜ்
சகோதரி. கிறிஸ்டீனா பிராங்
சகோதரி. விக்டோரியா ராஜன்
சகோதரி. பிரிஸ்சில்லா அந்தோனிசாமி
சகோதரி. எப்சிபா ஸ்டீபன்
சகோதரி. பிரிஸ்சில்லா செங்குட்டுவன்

சகோ. இயேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
சகோ. ப்ரடரிக் செல்வராஜ்
சகோ. ஐசக்துரை
சகோ. வேதநாயகம் ஜஸ்டஸ்
சகோ. ஸ்டான்லி பிரேம்குமார்
சகோ. செங்குட்டுவன்
சகோ. ஆரோக்கியராஜ்
சகோ. செல்வதாஸ்
சகோ. சீனிவாசன் ராகவன்
சகோ. தங்கராஜ் ஆல்பஸ் ஜேம்ஸ்

**கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்**
**(ஏசாயா– 62:2)**

### இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி – திரு. தம்புகுமார் டென்னிஸ்
திருமதி – திரு. வில்கின்ஸ் தினகரன்
திருமதி – திரு. சாம் ஆனந்த்
திருமதி – திரு. ஜஸ்டின் சுந்தரராஜ்
திருமதி – திரு. ராஜா செல்வன்
திருமதி – திரு. செல்வதாஸ்
திருமதி – திரு. சாமுவேல்
திருமதி –திரு. இயேசுரெத்தினம்
திருமதி – திரு. ஜீவா
திருமதி – திரு. வேளாங்கண்ணி
திருமதி – திரு. மணிராஜ்

**இனிய பிறந்த நாள்
மற்றும்
திருமணநாள்
வாழ்த்துக்கள்**

# 2016 ஜனவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/01/2016 | சகோ. ஜெயசேகர் | சகோ. ஜெகநாதன் |
| 10/01/2016 | சகோ.ஜஸ்டின் சுந்தரராஜ் | சகோ.ஆரோக்கியதாஸ் |
| 17/01/2016 | சகோ.அற்புத ராஜ் | சகோ.ஐசக் துரை |
| 24/01/2016 | சகோ.ஸ்டாலின் | சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ் |
| 31/01/2016 | சகோ.ஆரோக்கியதாஸ் | சகோ. இயேசுரெத்தினம் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/01/2016 | சகோ. எபிநேசர் | சகோ. ஜெயசேகர் |
| 08/01/2016 | சகோ. ஐசக் துரை | சகோ. கிறிஸ்டோபர் |
| 15/01/2016 | சகோ.ஜஸ்டின் சுந்தரராஜ் | சகோ.ஸ்டீஃபன் |
| 22/01/2016 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 29/01/2016 | சகோ. டேவிட் ஜெயகுமார் | சகோ. ரவிச்சந்திரன் |

14/01/2016 – அன்று இரவு 10:00மணி முதல் அதிகாலை 2:00மணி முதல்
இடம் : பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

28/01/2016 அன்று வாலிப ஐக்கிய கூடுகை
நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
இடம் : ஜெப வீடு பாஹீல்

# 2016 ஜனவரி மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. யார் ஜெபம் பண்ணும் போது கர்த்தருடைய மகிமை தேவாலயத்தை நிரப்பிற்று?

2. யாருடைய கண் பூமியெங்கும் உலாவி கொண்டிருக்கிறது?

3. மரித்தபின் கனம் பண்ணபட்டவன் யார்?

4. மரிக்கிறதற்கு முன்னே தனக்கு சொந்த கல்லரை உண்டாக்கி வைத்த ராஜா யார்?

5. மகா வீரனான லட்சத்திருபதனாயிரம் பேரை ஒரே நாளில் கொன்று போட்டவன் யார்?

6. மரித்தபின் தன் வீட்டிலே அடக்கம்பட்டபட்ட ராஜா யார்?

7. கர்த்தடைய ஆலயத்தில் தூப பீடத்தின் முன் வைத்து நெற்றியில் குஷ்ரோகம் பிடித்த ராஜா யார்?

8. வெங்கல பிரசங்க பீடம் செய்த ராஜா யார்?

9. கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும் என்று வேண்டிக் கொண்டவன் யார்?

10. தன் மனக் துன்மார்க்மாய் நடக்க அவனுக்கு ஆலோசனைகாரியாய் இருந்த தாய் யார்?

11. லட்சம் பராக்கிரமசாலிகளை 100 தாளந்து வெள்ளி கொடுத்து கூலிக்கு அமர்த்தினவன் யார்?

12. முன்னூறு ரதங்கள் உடையவன் யார் ?

13. எரிசலேமில் கோபுரங்களை கட்டினவன் யார்

14. தேவன் அவனை கைவிட்டார் அவன் யார்??

15. எங்கள் தேவனே அவர்களை நீர் நியாயம் தீர்க்கமாட்டீரோ எனறு வேண்டிக் கொணடவர் யார் ?

விடைகளை வருகின்ற 15-1-2016 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரிலோ அல்லது வாட்ஸ்ஆப்ஸிலோ (whatsApps # 66015503 - with Name ) அனுப்பும்படி (கொடுக்கும்படி) கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை"2 நாளாகமம்"புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

**- - -தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; - -**

மத்தேயு 7:7

நாம் மூழ்கி ஞானஸ்தானம் எடுத்திருப்போமானால் வேதம் ரோமர் 6:4.8ல் கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்படுவதாக கூறப்படுகிறது. ஆகவே நாம் கிறிஸ்துவுக்குள் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு அவருடனே கூடப்பிழைத்து இருப்போம் என்று நம்புவோம், என வேதம் சொல்லுகிறது.

ஒருவர் யாரேனும் மரித்துவிட்டால் அவர்களை அடக்கம் செய்வதற்கு முன் உடலில் இருக்கும் ஆடையை தவிர்த்து வேறெதாவது விட்டு நாம் எப்படி இந்த உலகிற்கு வந்தோம் சற்று எண்ணிப்பார்ப்போம். பழையவைகள் எலல் ாம் கழிநது புதிதாகிறது நமன் ம உயிரப் ◌ேகக் ◌ேனற் து, ஆகவே ஞானஸ்தானம் என்னும் உடன்படிக்கையில் பாவத்துக்கு மரித்து நீதிக்கு பிழைத்திருக்கிறோம். ஒன்றுமில்லாமல் அடக்கம் பண்ணப்பட்டு, ஒன்றுமில்லாமல் பிழைத்திருக்கிறோம்.

ஆகவே மறுபடியும் பிறந்த நீங்கள் முன்பிருந்தது போல அணிகலன்,ஆடம்பரம் என்பது ஆண்டவரின் உடன்படிக்கையை மீறியதாக உங்களுக்கு தோன்றவில்லையா? பார்த்தோமானால் அவர்கள் அந்த விக்கிரகத்திற்கு நிறைய அணிகலன்களை அணிவித்து அலங்கரிக்கப்பட்டு தெருத் தெருவாக அழைத்து வருவார்கள். அதை ஏற்று அதை காணவருகிறவர்களும் அதை போலவே இருப்பார்கள், அவைகளை நாம் பார்கிறோம் நமக்கு நன்றாக தெரிந்ததுதான் அவர்களுக்கும் நமக்கும் வித்தியாசம் வேண்டாமா? ஆனால் நாம் ஏன் உடன்படிக்கையை மீறுகிறோம். பிரியமானவர்களே நம்மை நாம் அலங்கரித்து கொள்வதினால் 2 காரணம் உள்ளது.

ஒன்று தேவன் உங்களை அழகாக படைக்கவில்லை என்று நம்மை படைத்த ஆண்டவரை குறை கூறுகிறோம் இரண்டாவது ஆடையினால் நம்மை நாம் பெருமைபடுத்தி உலகத்திற்கு நம்மை உயர்ந்தவர்களாக காட்டி தேவனை தாழ்த்துகிறோம். சகோதரிகளே இது நமது நோக்கமாக இருக்கலாமா? நீங்களும் இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாக வேண்டும் என்கிற வாஞ்சை இல்லையா? நாம் வேதம் வாசிக்கலாம் அநேக ஆராதனைகளில் கலந்து கொள்ளலாம்,சுவிஷேச கூட்டங்களுக்கு போய் வரலாம் ஆனால் வேதம் சொல்கிறபடி நடக்க மனமில்லை என்றால் நாம் எது செய்தாலும் அது உலகத்தை திருப்தி படுத்துவதாக மட்டுமே இருக்குமே தவிற ஆண்டவரை ஒருநாளும் சந்தோஷப்படுத்தாது. தம்முடைய பிள்ளைகள் சத்தியத்தில் நடக்கிறார்கள் என்பதை தவிற ஆண்டவருக்கு வேறு சந்தோஷமே கிடையாது.

பிரியமான சகோதர சகோதரிகளே உங்களை நீங்களே வஞ்சித்து கொள்ளாதிர்கள். இயேசு நம்முடைய பாவத்தை மன்னித்தார் என்று சொல்லி அவரை விசுவாசிப்பது எளிது, அதற்கு ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய முழு இருதயத்தையும் இயேசுவுக்காக கொடுத்து அவருக்கு சீஷராக இருக்கவேண்டும் என்று விரும்புவோர் மகி மிக குறைவு. ஆகவே

பிரியமானவர்களே உலக இச்சைக்கு நம்மை விலக்கி வீழ்ந்து போகாதபடி நம்முடைய இரட்சிப்பை நாம் காத்துக் கொள்வோம் ஆண்டவரே இன்றிலிருந்த உம்முடைய இராஜ்ஜியமே எனக்கு முக்கியம், இதுவே என் முக்கிய பிரதானம், பண ஆசையோ, உலக இச்சையோ எனக்கு முக்கியமல்ல, நீர் எனக்கு தரும் எதிலும் மகிழ்ச்சியாய் இருப்பேன், உமது பேரின்பத்தில் திருப்தியாவேன். உமது உடன்படிக்கையை மீறாமல் உமக்கு கீழ்படிந்து உமக்கு சீஷனாக சீஷியாக வாழ்ந்து உம்மையே நேசிப்பேன். உமது வாக்குத்ததத்ததை சுதந்தரித்துக் கொள்ள கிருபைதாரும்.தேறினவர்கள் எப்பொழுதும் தம்முடைய குருவை போல் இருப்பார்கள் என்ற வார்த்தையின்படி நம் குருவேசு சாமியின் வார்தை நம்முடைய வாழ்வில் நிறைவேற நாம் ஜெபிப்போம்!

## TEN WAYS TO LOVE

1.listen with out inerrupting (Prov:18)
2. Speak with out accusing (James 1:19)
3. Give with out sparing (Prov:21:26)
4. Pray with out accusing ( colossians 1:9)
5. Answer with out Argssing(Prov:17:1)
6. Share with out Pretending(Ephesians 4:15)
7. Enjoy with out comlaint (Philippians 2:14)
8. Trust with out Wavering (corinthians 13:7)
9. Forgive with out punishing (colossians 3:13)
10. Promise with out forgetting (Prov:13:12)

## Prayer before sleep

Dear God as I pay me down to sleep relax the tension of my body
Calm the restlessness of my mind ;
Still the thoughts which worry and perplex me
Help me to rest myself and my problems in your
Strong and loving arms
Let your sprit spark to my mind and heart
While I am asleep, so that,
When I wake up in the morning
I may find that I have received in the right time
Light for my way
Strength for my tasks
Peace for my worries
Forgiveness for my sins
Grant me sleep tonight and tomorrow power to live . Amen

## ரோலண்ட் பின்க்காம் (1872-1942)

மிஷனெரியாகச் சென்றபின் வியாதி பாடுகள் சோர்வுகளைப் பாாத்து என்னால் இனி மிஷனெரிப பணி செய்ய இயலாது என்று இருமுறை தாயகம் திரும்பிவிட்ட ஒருவரைக் கொண்டு தேவன் மாபெரும் காரியங்களை நிகழ்த்த முடியுமா? ஆம் என்கிறது ரோலண்ட் பின்க்காமின் வாழ்க்கை வரலாறு. சூடான் உள்நாட்டு மிஷன் என்ற மிஷனெரி இயக்கம் இவரால்தான் உருவாக்கப்பட்டது. ரோலண்ட் பின்க்காம் 1872-ம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தில் பிறந்தார். நடுத்தரக் குடும்பமான இவர்களது குடும்பத்தில் அவரது தகப்பனாரின் மரணத்தினால் குடும்பத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட தனது 13-வது வயதில் வேலைசெய்து தனது குடும்பத்தின் பாரத்தைச் சுமந்தார். அந்நாட்களில் இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். மூன்று வருடத்திற்குப் பிறகு கனடா தேசத்திற்கு வேலை நிமித்தம் சென்றபோது சுவிசேஷத்தை அறிவிப்பதே தனது முழு முதல் வேலை என்று தேவன் திட்டவட்டமாக உணர்த்துவதை அறிந்தார். அதனால் தேவப்பணி செய்ய இரட்சணியசேனை என்ற ஸ்தானத்தில் இணைந்தார். அங்கு அவருக்கு மிஷனெரிபாரம் கொண்ட திருமதி கோவன்ஸ் என்பவரைச் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. திருமதி கோவன்ஸ் தனது மகளை சீனாவுக்கு மிஷனெரியாக அனுப்பி இருந்தார்.

1893-ல் கப்பல் மூலம் சூடான் தேசத்திற்கு மிஷனெரியாக பணயப்பட்டார். அவருடன் தாமஸ் கேனட்டும் என்பவரும் புறப்பட்டார். ஆப்பரிக்காவின் லாகாஸ் என்ற இடத்தை அடைந்தவுடன் அங்கிருந்த மேற்கு ஆப்பிரிக்க மிஷனெரிகள் இவர்களை நோக்கி சூடான் தேசத்தில் உயிர் வாழ்வதே கடினம். அங்குள்ள மலேரியா போன்ற தொற்று வியாதிகள் வந்து உங்களைக் கொன்று விடும் என்றனர். இதனைக் கேட்டவுடன் இதுவரை ஒரு மிஷனெரிகூட சூடான் பகுதிக்குச் சென்று சுவிசேஷம் சொல்லவில்லை என்ற உண்மையை உணர்ந்துகொண்டு நாம் திரும்பி போகக்கூடாது என முடிவு எடுத்தனர். ஆனாலும் சூடானை நெருங்கும் போது ரோலண்டும் தாமஸீம் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர். சிறிது நாட்களில் சுகம் பெற்றாலும் மீண்டும் மலேரியாவினால் தாமஸ் தாக்கப்பட்டு மரித்துப் போனார். இதைப் பார்த்தவுடன் ரோலண்டும் விசுவாசத்தில் தடுமாறி உடனே இங்கிலாந்து திரும்பிவிட்டார். இதைக்குறித்து ரோலண்டு தனது குறிப்பில் எழுதும்போது தேவன் பேரில் உள்ள எனது விசுவாசம் அடித்தளம்வரை ஆட்டம் கண்டது. இருளில் இருக்கும் மக்களுக்கு இயேசுவின் கடைசிக் கட்டளையான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத்தானே சென்றோம். ஆரம்பத்திலே இப்படிப்பட்ட கஷ்டமா? போன்ற பல கேள்விகள் எனது மனதைக் குடைந்தது. இறுதியாக உறுதியான கற்பாறையான தேவன்பேரில் விசுவாசம் வைக்கக் கற்றுக்கொண்டேன் என்கிறார். பின் இங்கிலாந்திலிருந்து கனடா தேசத்திற்கு வந்த அவர் சூடான் தேசத்திற்கு மறுபடியும் செல்ல

ஆயத்தமானார்,பணித்தளத்தில் வாழ்வதற்கும் தேவபணி செய்வதற்கும் தன்னை ஆயத்தப்படுத்தும் வகையில் இளநிலை மருத்துவப் படிப்பையும் நியூயார்க்கில் வேதாகமப் பள்ளியில் வேதாகமப் படிப்பையும் 1895–ல் படித்தார்.

1898–ம் ஆண்டு மே மாதம் சூடான் உள்நாட்டு மிஷன் என்ற மிஷனெரிச் சங்கம் நிறுவப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதே மாதத்தில், ஹெலன் பிளேயர் என்பவரைத் திருமணம் புரிந்தார். மீண்டும் 1900–ம் ஆண்டு பின்க்காம் தம்பதியினர் இரண்டு வாலிப தன்னார்வ ஊழியர்களுடன் சூடானை நோக்கிப் பயணமானார்கள். லூகாஸில் இறங்கியவுடன் மறுபடியும் மலேரியா தாக்கி அதிகமாய் நோய்வாய்ப்பட்டார். உடனே அவரை வீடு திரும்ப இயக்கம் உத்தரவிட்டது. அதிக சோர்வுற்ற ரோலண்ட் பின்க்காம் இப்படி நான் வீடு திரும்புவதற்குப் பதில் இறந்திருந்தால் கூட நலமாயிருக்கும் என்று எழுதுகிறார். சிறிது சிறிதாக சரீரத்தில் பெலன் பெற்ற ரோலண்ட் மறுபடியும் புதியதாக இணைந்த நான்கு மிஷனெரிகளுடன் சூடானை நோக்கி 1901–ல் பயணமானார். அவரது இந்த மூன்றாம் மிஷனெரிப் பயணம் வெற்றியாக அமைந்தது. பத்து வருட ஊழியத்திற்குப் பிறகு வெகு சிலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளாக மாறினர். சில புதிய பணித்தளங்களும் திறக்கப்பட்டது. அப்போது மலேரியா நோய்க்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அதுமுதல் மிஷனெரிகள் சூடான் ஆப்பிரிக்காப் பகுதிகளில் பயமில்லாமல் தங்கி ஊழியம் செய்ய ஆரம்பித்தனர்.

மிஷனெரிகள் அங்கு நிலைத்து இருந்ததற்கான மற்ற ஒரு முக்கிய ஆதாரம் ஜெப ஆதரவாளர்களின் ஜெபமே. பணித்தளத்தில் ஊழியம் செய்ய முடியாமல் தடுத்த மலேரியா நோய்க்கு அடுத்ததாக அந்தகார சக்திகள் பற்றிய மக்களின் பயம் மிகப்பெரிய தடையாக இருந்தது. சூடான் எத்தியோப்பியா பகுதிகளில் பேய்களையும், ஆவிகளையும் அதிகம் நம்பினர். தங்களைச் சுற்றிலும் பல பொல்லாத ஆவிகள் இருப்பதாகவும்அதிகம் நம்பினார்கள். அதனால் அவர்களுக்கு கிறிஸ்தவ விசுவாசத்தைச் சொன்னபோது அதை நம்ப மறுத்தனர். சூன்யக்காரிகளும், மந்திரவாதிகளும் இவர்களது வாழ்வில் அதிக முக்கியத்துவம் பெற்றனர். ஆப்பிரிக்காவின் சூடான் பகுதியில் தொழு வியாதி அதிகம் பரவி இருந்தது. இந்த வியாதியை முழுவதும் நீக்க மிஷனெரிகள் பிரயாசப்பட்டனர். 1920–ம் வருடம் தொழு வியாதியஸ்தர் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட பணிமூலம் 30000 தொழு நோயாளிகளை நைஜீரியாவில் மட்டும் கவனித்து வைத்தியம் பார்த்தனர். இதில் அநேகர் இஸ்லாமியர் இவர்கள் தங்கள் குடும்பத்தின் எதிர்ப்பின் மத்தியிலும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். ரோலண்டின் தியாக வாழ்வின் மூலம் ஊழியம் விரிவடைந்தது. எத்தியோப்பாவிலும் சென்று சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு திருச்சபை நாட்டப்பட்டது.

தொகுப்பு : கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரர் . சுகுமார்

# விசுவாசிப்பது எப்படி

## விசுவாசம் என்றால் என்ன ?

விசுவாசமாவது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின்நிச்சயமுமாயிருக்கிறது. (எபிரேயர் 11: 1) என்று வேதம் கூறுகிறது. நமது கண்களால் காணாதபோதிலும் வேதத்தில் கூறப்பட்டிருப்பதால் அவற்றை உண்மை,நிச்சயம்என்று நம்புவதும்,அந்த நம்பிக்கையில் உறுதியாயிருப்பதுமே விசுவாசம். நம் சுயபுத்தியின் மேல், உணர்ச்சிகள் மேல், அறிவின் மேல், சூழ்நிலைகள் மேல், மனிதனின் வார்த்தைகளின் மேல் சாயாமல் , முழு இருதயத்தோடும் கர்த்தர் மேல் நம்பிக்கையாய் இருக்கவேண்டும். அநேக நேரங்களில் நம்முடைய உணர்ச்சி, அறிவுபலவித காரணங்கள், சூழ்நிலைகளைக் கொண்டு விசுவாசம் வைக்கிறோம், இது உண்மையான விசுவாசம் ஆகாது. யோசுவா 6:1ல் இருந்து 21ல் இஸ்ரவேலர்கள் எரிகோவை சுற்றி வந்தது உணர்ச்சியின் படி அல்ல. ஒரு மதிலை சுற்றி வந்து சப்தம் செய்தால் அது இடிந்து விழாது, என்பது உணர்ச்சியும், சுய புத்தியும் சொல்பவை. ஆனால் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து கீழ்படிந்ததால் எரிகோ மதில் விழுந்தது. நாம் காணாதவைகளையும் நம்புவதுதான் விசுவாசம் (ரோமர் 8:24இ25)

## நாம் எந்த விதத்தில் விசுவாசிக்க வேண்டும்?

வேதத்தில் கூறி இருப்பவை தேவனுடைய வார்த்தைகள், அவற்றை அப்படியே நம்பவேண்டும் அதற்கு எதிரான எண்ணங்களை நாம் அகற்றிவிட வேண்டும். (ஐஐ கொரி 10:5) ஆபிரகாம் தன்னுடைய சரீரமும், சாராளின் கர்ப்பமும் செத்து போயிருந்தாலும் அதை எண்ணாமல் விசுவாசித்தான் என்று ( ரோமர் 4:19)ல் வாசிக்கிறோம்.இதுபோலவே நம் உணர்ச்சியையும் சூழ்நிலைகளையும் பார்க்கக்கூடாது. நம்முடைய மனதை தேவனுடைய வாக்குத்தத்தங்களால் நிறப்பவேண்டும். அவருடய வசனத்தை தியானித்து, உரிமையோடு சுதந்தரித்துக் கொண்டு, அதை வாழ்க்கையில் கடைபிடித்து அதையே அறிக்கை செய்ய வேண்டும் (ஐஐ கொரி 1:20)கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களை சந்தேகப்படாமல் அவற்றை நிறைவேற்றுவார் என்று நம்பி தேவனை துதிக்க வேண்டும். ஒரு காரியத்திற்காக நாம் நன்றாக ஜெபித்தபின் வேதத்தில் உள்ள வாக்குத்தத்தங்களைப் பிடித்துக் கொண்டு அவரை மகிமைபடுத்த வேண்டும் (ரோமர் 4:20இ21)அப்பொழுது கர்த்தர் தம் வாக்கை நிறைவேற்றுவார்,

நம்முடைய ஜெபங்களும் கேட்கப்படும். நாம் பெற்றுக் கொண்டோம் என்று விசுவாசித்து துதிக்கவேண்டும், மேலும் அவரின் கட்டளைகளுக்குக் கீழ்படியவேண்டும்.

**விசுவாசத்தை எப்படி பெறுவது?**

தேவனுடைய வசனத்தை வாசித்து தியானித்து நன்றாக மனதில் தக்க வைக்க வேண்டும் (ரேமார் 10:7) இது ஆவியின் கனிகளில் ஒன்று (கலா 5:22)இதற்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற வேண்டும். ஆப்பொழுது பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்வார் நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீதே நம் கண்களை பதிக்க வேண்டும் 12:1. எந்த மனிதனையும் நாம் பார்க்ககூடாது. இயேசு தோமாவிடம் கண்டு விசுவாசிப்பதைவிட காணாதிருந்தும் விசுாவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். மேலும் தம்மிடம் சுகத்திற்காக வந்த அநேகரிடம் உன் விசுவாசத்தின் படியே உனக்கு ஆகக்கடவது என்றார். அவர்கள் அவரை விசுவாசித்து சுகம் பெற்றார்கள்.

**நாம் விசுவாசிப்பதால் என்ன நன்மை?**

விசுவாசத்தை கொண்டு கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம் (எபே2:8)பாவத்திற்கு மனஸ்தாபப்பட, அறிக்கையிடுகிறோம். கர்த்தர் மன்னிப்பார் என்று விசுவாசித்து இவ்விதம் செய்கிறோம். அவரும் மனமிரங்கி மன்னிக்கிறார். நம் உள்ளத்தில் சந்தோஷமும் சமாதானமும் உண்டாகிறது. (ரோமர் 15:13). இவ்விதம்விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று வாசிக்கிறோம்.(ஆப 2:4)விசுவாசத்தினால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம்பெறுகிறோம்.(யோ 7:38) அபிஷேகத்திற்காக ஜெபிக்கும் பொழுதோ, அல்லது மற்றவர்கள் நம்மீது கைகளை வைக்கும் பொழுதோ இப்பொழுதே கர்த்தர் என்னை அபிஷேகிக்கிறார், என்று விசுவாசித்து கர்த்தரை துதிக்க வேண்டும் அப்பொழுது கர்த்தர் நிரப்புவார். விசுவாசத்தினால் நமக்கு பாதுகாப்பும், பராமரிப்பும், கிடைக்கிறது (தானி 6:23) (மத்தேயு 6:25) ( தானி 3:17-26) தானியேலும் அவன் நண்பர்களும் கர்த்தரை விசுவாசித்து உயிர் பிழைத்தார்கள். விசுவாசித்து ஜெபிக்கும் போது பதிலை பெறுகிறோம் (மத்தேயு 21:22)அற்புத அடையாளங்கள் நம்மூலம் நடைபெறும் மத்தேயு 17:20 மாற் 16:17, விசுவாசிக்கிறவர்களுக்கு எல்லாம் கூடும் மாற் 9:23. வெற்றி வாழ்க்கை வாழலாம். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்(1 யோ 5:4) எபே 6:16) ஆகையால் கர்த்தர் தம்மை நோக்கி கூப்பிடுகிறவர்களுக்கு பலனலிக்கிறார் என்று விசுவாசிக்க வேண்டும். விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி 11:6) விசுவாசத்தினாலே வராத எதவும் பாவமே.(ரோ 14:23) நாம் கர்த்தர் மீது, உறுதியான உண்மையான விசுவாசம் வைத்து வெற்றி வாழ ஜெபிப்போம் கர்த்தர் உதவி செய்வாராக!.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

# கடந்த மாத நிகழ்வுகளில் தங்கள் பார்வைக்கு சில















# இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

# Happy New Year 2016

## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுப்பினர்கள்


**தலைவர் – சகோ. ரவிச்சந்திரன்**
23913675 - 66889706

**செயலாளர் – சகோ. ஜெயசேகர்**
23711698 - 96646444

**பொருளாளர்– சகோ. ஆரோக்கியதாஸ்**
99870126

**வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. அற்புதராஜ்**
60692485

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait


**தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.**

Private Circulation only